**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**

**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**OS.No: 195/2023 நாள் 16.03.2026.**

**வாசா.1, திரு.பரமசிவம் நாடார்**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 5 முதல் 8 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

எனக்கு எழுதப்படிக்க தெரியாது கையொப்பம் மட்டும் செய்வேன் . நான் விவசாயம் தொழில் பார்க்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியுமா என்று கேட்டால் எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்பதால் தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ.10 முதல் வாசாஆ.12 ஆவணங்களான பிராது 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாயார் பார்வதியம்மாள் 1 முதல் 3 எதிர்வா்திகளுக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று அறிவிக்க கோரி நான் வழக்கு தாக்கல் செய்தேன்ள ன்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் முறையாக சார்பதிவக விதி முறைகள் படி பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாயார் பார்வதியம்மாள் என்பவர் பலவேசம் நாடார் என்பவரின் மனைவி ஆவார் அவருக்கும் தாவா சொத்துக்கும் சம்மந்தமில்லை என்பதால் அவர் எழுதிக்கொடுத்த ஆவணங்கள் செல்லாது என்று நான் சொல்கிறேன். உதிர மாடசாமி மனைவி பார்வதியம்மாள் என்பவர் என்னுடைய மாமியார் ஆவார். அவருடைய மகள் பெயர் மாரியம்மாள் . அவர் என் மனைவி ஆவார் எங்கள் சொத்தை தான் மேற்படி பலவேச நாடார் மனைவி தவறாக தன் குழந்தைகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணங்கள் மூலமாக எழுதிக்கொடுத்துள்ளார் அது போல் வாசாஆ.16 கிரைய ஆவணமான 13.04.2023ம் தேதியிட்ட 4ம் எதிர்வாதிக்கு எழுதிக்கொடுத்ததும் செல்லாது என்று பரிகாரம் கோரியுள்ளேன். அதனால் பத்திரங்கள் முறையாக பதிவு செய்யப்பட்டு 1 முதல் 4 எதிர்வாதிகள் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் எங்களது சொத்தை மோசடியாக பட்டா பெற்றுள்ளார்கள். நான் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் வழக்கில் உள்ள 5 முதல் 8 எதிர்வாதிகளுக்கு

எதிராக நாங்கள் கோரியுள்ள பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்ககூடியதாக இல்லை என்று சொன்னால் அது சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 16th day of March 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.